**2016 மே மாதம் 01 ஆந் திகதி கிங்ஸ்பரி ஹோட்டலில் நடத்தப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பாராட்டு இராப்போசன விருந்துபசாரத்தில் மாட்சிமைதங்கிய பிரதம நீதியரசர் திரு. கே. ஸ்ரீபவன் அவர்கள் ஆற்றிய உரை**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் ஆனந்தாக் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூர்ரிகளினதும் அதிபர்களே, புகழ்பெற்ற பழைய மாணவர்களே, ஆசிரியர் குழாமின் அங்கத்தவர்களே, பெற்றோர்களே, மிகவும் முக்கியமான ஆட்களான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும் ஆனந்தாக் கல்லூரியினதும் எனது அன்புக்குரிய மாணவர்களே, அன்புக்குரியவர்களே தயவான அறிமுகம் மற்றும் அன்பான வரவேற்புக்காக உங்களுக்கு நன்றி. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் ஆனந்தாக் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளினதும் நாட்காட்டியில் மிகமுக்கியமான இந்த தருணத்தில் உங்களின் பிரதம அதிதியாக காலந்துகொள்ளுமாறு உங்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளினை எனது மனைவியும் நானும் எமக்களித்த கௌரவமாகக் கருதுகிறோம். தான் கல்விகற்ற பாடசாலையின் வைபவமொன்றில் பிரதம அதிதியாக அழைப்பு விடுக்கப்படுகின்றமை எந்த ஒருவரினதும் வாழ்க்கையில் உன்னதமான தருணங்களில் ஒன்றாக அமைதல் வேண்டும். ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் இன்றைய தினம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது ஒரு சிறப்புரிமை என்பதை நான் நன்கு அறிவேன். இந்த வாய்ப்பினை எனக்கு வழங்க காரணமாக அமைந்த அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த வருடத்தின் வீ.ரீ.எஸ். சிவகுருநாதன் கிண்ணப் போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் பனிக்கார் - தனபாலசிங்கம் சவால் கேடயத்தை வென்றெடுத்தவர்களுக்கும் நான் இச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வருடாந்த விசேட தருணத்தில் பங்கேற்கும் பொருட்டு உங்களில் பெரும்பாலானோர் இயலுமான உச்சமட்ட முயற்சியை எடுத்திருப்பீர்கள் என்பதோடு அது இரண்டு பாடசாலைகளினதும் உயிர்க்குணத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றதென நான் நம்புகிறேன். குழுச் செயற்பாடுகளின் போதும் பாடசாலை நிகழ்ச்சிகளிலும் பொது வாழ்க்கையிலும் பற்கேற்பு ஒரு முதன்மை அம்சமாக அமைகின்றதென்பதை நாம் அனைவரும் அறிந்திருந்த போதிலும் எமது நிறைவான தோற்றுவாயினை அடைவதற்கேதுவாக எம்மை ஊக்குவிப்பது வெற்றியேயாகும். இரண்டு கல்லூரிகளுக்குமிடையில் இந்த வருடாந்த கிரிக்கெற் போட்டி ஊடாக நட்புறவு, புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையின் ஈடுபாட்டினை விருத்திசெய்யும் பொருட்டு ஆனந்தாக் கல்லூரியினதும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூர்ரியினதும் பழைய மாணவர் சங்கம் மேற்கொள்கின்ற இடையறாத முயற்சிகள் சம்பந்தமாக நான் மிகவும் பூரிப்படைந்துள்ளேன். இது உண்மையிலேயே இந்த நாட்டினை ஆக்கமுறையான மாற்றமொன்றை நோக்கி நெறிப்படுத்தும் பொருட்டு இரண்டு பாடசாலைகளினதும் பழைய மாணவர் சங்கங்களால் மேற்கோள்ளபப்டுகின்ற எதிர்காலத்தைக் கருத்திற்கொண்ட முயற்சியாகும்.

நான் எதைப் பற்றிப் பேசவேண்டுமென சிந்திக்கையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எனது வாழ்க்கையின் மிகமுக்கியமான இரண்டு தசாப்தங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் மற்றும் சந்திப்புத் தொடர்களின்பால் என் நினைவலைகள் மீண்டும் ஓடிச்சென்றது. இன்றைய தினத்தில் எமக்கு சவாலாக அமைந்துள்ள முக்கியமான தேசிய பிரச்சினைகள் - அதாவது சமாதானம், வன்முறை, நல்லாட்சி, மனித உரிமைகள், பொருளாதார அபிவிருத்தி போன்ற சிக்கல்கள் சம்பந்தமாக இன்றுள்ள நாம் அனைவரும் கொண்டுள்ள நிலைப்பாடுகள் பாடசாலையில் எமது வாழ்க்கையை வடிவமைத்த வருடங்களாக கருதப்படுகின்ற காலப்பகுதியில் கூடிக்குறைய நாங்கள் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் கட்டிவளர்க்கப்பட்டுள்ளன என்பதை நான் நம்புகிறேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஒரு காலகட்டத்தில் தலைமை ஆசிரியராகப் பதவிவகித்த அத்துடன் கீர்த்திமிக்க பழைய மாணவர்களில் ஒருவரான திரு. வி.ரி.எஸ். சிவகுருநாதன் அவர்களும் ஆனந்தாக் கல்லூரியில் விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்களை தலைசிறந்த மட்டத்தில் புகட்டிய சிரேட்ட ஆசிரியப் பெருந்தகைகளான திரு. பனிக்கார் மற்றும் திரு. தனபாலசிங்கம் ஆகிய புகழ்பெற்ற ஆசிரியப் பெருந்தகைகளுக்கு பல தசாப்தங்களான அயராது உழைத்து அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைக்காக பாராட்டு தெரிவிக்கும்

பொருட்டு இந்த வருடாந்த வைபவத்தை ஏற்பாடு செய்தமை சம்பந்தமாக நான் மகிழச்சி அடைகிறேன்.

அன்புக்குரியவர்களே, நீங்கள் அனைவரும் அறிந்தவாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்த நாட்டின் முதன்மையான இந்துக் கல்வி நிறுவனமாக அமைவதோடு பாடசாலைப் பருவத்தில் அவர்கள் மத்தியில் கட்டி வளர்க்கப்பட்டுள்ள ஒழுக்கம், அர்ப்பணிப்பு மற்றும் குணவியல்புடன் அவர்கள் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழிலிலும் கீர்த்திபெற்றுள்ள பல மாணவர் தலைமுறையினரை அது உருவாக்கியுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அங்கிருந்து உருவாக்கப்பட்ட மாணவர் அனைவர் மத்தியிலும் இந்த நோக்கத்தை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக எல்லாவேளைகளிலும் முன்வந்துள்ளனர் என்பதில் எவ்விதமான சந்தேகமும் கிடையாது. ஒழுக்கமும் அடக்கமும் தொடக்கத்தில் இருந்தே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இலச்சினையாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பல தலைமுறைகளாக பெரும்பாலானோரின் பொறாமைக்கும் அமைதியான நன்மதிப்பிற்கும் பாத்திரமான ஒப்பற்ற நிலைமைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்களாவர். சட்டத்துறையில் கீர்த்திமிக்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஒருசிலரின் பெயர்களை நான் குறிப்பிட்டால் முன்னாள் பிரதம நீதியரசர் திரு. எஸ் சர்வானந்தா அவர்கள், முன்னாள் சட்ட மா அதிபர்களுள் ஒருவரான திரு. சிவா பசுபதி அவர்கள் மற்றும் முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் திரு. கே. பாலகிட்னர் அவர்கள் போன்றோர் அவர்கள் மத்தியில் உள்ளனர். அத்துடன் நானறிந்த வகையில் ஆனந்தாக் கல்லுர்ரி உருவாக்கிய சட்டத் துறையில் கீரத்திமிக்க பாத்திரங்கள் மத்தியில் முன்னாள் சட்ட மா அதிபர் யுவஞ்ஜன விஜயதிலக அவர்கள், நிகழ்கால மேலதிக சொலிசிட்டர் ஜனரல் யசந்த கோதாகொட அவர்களைப் போன்றே பல சனாதிபதி சட்டத்தரணிகளும் உள்ளனர்.

அன்புக்குரியவர்களே, எந்தவொரு நாட்டினதும் எதிர்கால சௌபாக்கியத்தை உண்மையிலேயே மேம்படுத்துபவர்கள் மாணவர்களே என்பதை நாங்கள் எல்லா வேளைகளிலும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். எனவே அவர்களின் பலம்பொருந்திய நற்குணங்களை வளர்த்தெடுப்பதும் சமூகத்திற்கு ஊக்கமுடனும் ஆர்வத்துடனும் உதவிபுரிபவர்களாக மாற்றுவதும் மேற்கொள்ளப்படல் வேண்டும். வாழ்க்கை தொடர்பான ஆக்கமுறையான உளப்பாங்குகளை ஏற்படுத்திக் கொள்ள மாணவர்கள் முயற்சி செய்தல் வேண்டும். சிந்தனைகள் இயல்பாகவே செயல்களைத் தோற்றுவிக்கின்றன. அத்துடன் செயல்கள் பழக்கங்களை ஏற்படுத்துவதோடு அதன் பின்னர் பழக்கங்கள் மனிதனின் நடத்தைகளை வடிவமைத்தல் இடம்பெறுகின்றது. நன்மை அல்லது தீமையை நோக்கி எமது தலைவிதியைத் தீர்மானிப்பது நடத்தைப் போக்காகும். தேசமொன்றின் தலைவிதி இத்தகைய நடத்தைப் போக்கு மூலமாகவே தீர்மானிக்கப்படுகின்றது. பொதுவாழ்க்கையிலாயினும்சரி மாணவர் வாழ்க்கையிலாயினும்சரி எமது நடத்தைப் போக்கில் குறைபாடுகள் நிலவுமாயின் உயர் மட்டத்தை அடைவதில் நாங்கள் தோல்வி அடைவோம். பாடசாலைகள் இது தொடர்பில் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றுகின்றன. பலம்பொருந்திய விழுமியங்களின் அடிப்படையில் அறிவினை வழங்குதல் நீங்கலாக ஒற்றுமையினதும் ஐக்கியத்தினதும் பிரதிபிம்பமாக மாறவும் இனத்துவ மற்றும் மதரீதியான தப்பெண்ணம் நிலவாத சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பவும் பாடசாலைகள் எல்லாவேளைகளிலும் முயற்சி செய்தல் வேண்டும். ஆழமான இனத்துவ மற்றும் மதரீதியான ஈடுபாடுகள் காரணமாக தோன்றிய யுத்தத்தினால் ஒரு காலகட்டத்தில் பிரிந்திருந்த நாடொன்றில் ஆனந்தாக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் சங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த முயற்சியானது இந்த நாட்டில் பல்லின, பல்மதத் தன்மையை பேணிவந்து அனைத்து இலங்கைப் பிரசைகளினதும் மனங்களில் தாம் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வினை உறுதிப்படுத்துவதற்கான அத்திவாரத்தை இடுமென நான் நம்புகிறேன். இது எமது தேசத்தின்பால் காட்டுகின்ற அதியுயர் பங்களிப்பாக அமையுமென்பது எமது நம்பிக்கையாகும்.

எமது நாட்டை பிளவுக்கு இலக்காக்கிய தொடர்ச்சியாக நீண்டுசென்ற ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற்றமையானது துரித பொருளாதார வளர்ச்சியை அடைய வழிசமைக்கின்ற

நல்லிணக்கம் மற்றும் மனங்களைக் குணப்படுத்துதலை நெருங்க எமக்கு இயலுமென்ற நியாயமான எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி உள்ளது. அவர்கள் சார்ந்துள்ள இனம் அல்லது அவர்கள் பின்பற்றுகின்ற மதம் அவர்களின் நடத்தைப் போக்கில் அடங்கியுள்ள பண்புகளுக்கிணங்க அவர்களுக்கு தீர்ப்பளிக்கின்ற தேசத்தில் உயிர்வாழ எமது பிள்ளைகளுக்கும் தற்போது வாயப்பினைப் பெற்றுக்கொள்ள இயலுமென மார்ட்டின் லூதர் கிங் 1960 ஆம் ஆண்டளவில் கண்ட கனவு மீது நம்பிக்கை வைக்க நாமனைவரும் மீண்டும் ஒருதடவை ஆரம்பித்துள்ளோம். உண்மையை விளங்கிக்கொள்ள அவசியமானவை ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் நிலவுகின்றதாக புத்தபெருமான் போதித்தருளியுள்ளார். தேவ இராச்சியம் உங்களுக்குள்ளேயே நிலவுகின்றதென இயேசு கிறிஸ்து உபதேசித்தருளினார். முகம்மது நபி நாயகம் அவர்கள் உங்கள் கழுத்தில் உள்ள நரம்புகளைப் பார்க்கிலும் இறைவன் உங்களோடு நெருக்கமாக இருக்கிறார் என போதித்தருளினார். கீழ்மட்டத்திலுள்ள புழுவைப்போன்ற மிகவுயர்வான மனித உயிருக்குள்ளேயும் ஓரே தெய்வீகத்தன்மை நிலவுவதாக கிருஸ்ன பகவான் பகவத் கீதையில் உபதேசிக்கிறார். மனிதனிடம் தெய்வீகப் பண்பு நிலவுகின்றமையை எல்லா மதங்களும் உறுதிப்படுத்துவது அனைவருக்கும் புலனாகின்றது.

இது தான் எமக்கு பெருமையை சேர்க்கின்றது, எம்மீது பொறுப்பினைக் கையளிக்கின்றது, நாங்கள் தெரிவுசெய்கின்ற ஏதேனும் விதத்தில் எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்கான ஆற்றல் எம்மிடம் நிலவுவதாக நம்பவைக்கின்றது. எமக்குத் தேவையானது என்ன என்பதைக் கண்டுபிடிக்க நாங்கள் முயற்சிசெய்ய வேண்டுமென்பதோடு நாங்கள் அதனை அறிந்ததும் நாங்கள் எங்கள் அபிப்பிராயத்தில் திடமாக நிலைகொண்டிருப்பின் , நாங்கள் ஒற்றுமையாக செயலாற்றுவோமாயின் மனிதனால் சாதிக்க இயலாதது ஒன்றுமே கிடையாது. பாலங்களை எளிதாக தகர்த்துவிட இயலுமெனினும் அவற்றைக் கட்டியெழுப்பவது அவ்வளவு தூரம் இலகுவான கருமமன்று. அதைப்போன்றே வாழ்க்கையில் மனவெழுச்சிசார்ந்த மற்றும் உளவியல்சார்ந்த பாலங்களை மீண்டும் கட்டியெழுப்புவது மிகவும் கடினமானதாக அமைவதைப்போன்றே அவற்றில் வடுக்களும் எஞ்சுகின்றன.

நாங்கள் பிரிந்து நின்று ஒருவருக்கொருவர் எதிராக போராடி வருவதால் நாங்கள் இயல்பாகவே ஒழுக்கமற்றவர்கள் என்பதாலும் ஐக்கியமாக இருப்பதில்லை என்பதாலுமே தான் இன்று நாங்கள் இந்த நாட்டில் சந்திக்கின்ற குழப்பமான நிலைமைகள் தோன்றியுள்ளன. இந்த நாட்டில் நிலவுகின்ற குழப்பமான இயல்பானது எமது ஆன்மாக்களுக்கு உள்ளே இருக்கின்ற குழப்பமான இயல்பின் பிரதிபலிப்பாகும்.

எமது இயல்பினை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஆற்றல்கொண்டுள்ள ஆக்கக்கூறினை கண்டுபிடிக்க எம்மால் இயலுமாயின் அவ்வேளையிலேயே தீர்மானிக்கப்பட்ட எதுவும் கிடையாதென்பது, நிலையான எதுவுமே கிடையாதென்பது மற்றும் அனைத்துமே எமக்கு திறந்தநிலையில் நிலவுகின்றதென்பதைப் போன்றே நாங்கள் இந்த நாட்டின் எதிர்காலத்தை எந்தவிதத்தில் நிர்மாணிக்கப் போகிறோம் என்பது எம்மீது தங்கியுள்ளதென்பது எமக்கு விளங்கும்.

துரதிருஸ்டம் என்னவெனில் நீங்கள் அனைவரும் அறிந்தவகையில் எமது புதிய சூழ்நிலைக்கு அவசியமாகின்ற துணிச்சல், சுயகட்டுப்பாடு மற்றும் சமநிலையான உணர்வினைக் கொண்டதாக வாழ்க்கையின் சிக்கல்களை எதிர்கொள்வதற்காக எமது பாடசாலைகளில் பழக்கப்படுத்துவது இடம்பெறுவதில்லை. உயரிய நோக்கங்களுக்காக இந்த ஒழுக்கமுள்ள ஆர்வமின்மையால் மாணவர்கள் தமக்கும் அதைப்போன்றே ஒட்டுமொத்தமான சமூகத்திற்கும் கேடாக மாறுகின்றனர். வாலிபப் பருவம்தான் வாழ்க்கையில் மிகவும் சிறியளவிலேனும் தவறான வழியில் பிரவேசிப்பதனால் அனர்த்தமேற்பட இடமுள்ள பருவமாகும். எனவே ஒழுக்கம் அவசியமாகின்றது. அனைத்து வெற்றிகளையும் குறிப்பாக உன்னதமான வெற்றிகளையும் அடைவதற்காக அது அவசியமாகின்றது. ஒழுக்கம் மாணவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அது எமது சமூகத்திற்கும் அவசியமானது. ஒழுக்கம் என்பது சட்டங்கள் அல்லது சடங்குகளுக்கு தோற்றுவாயாக அமைந்த அடிப்படைக்கு நாங்கள் மதிப்பளிப்பதால் அல்லது அவ்வாறு செய்யாமையின் பாதகமான விளைவுகளுக்கு பயப்படுவதாலும்,

நாங்கள் அதனைச் செய்கின்றோமா என்பதைக் கண்டறிய எவரேனும் இல்லாவிட்டாலும் சட்டங்களையும் சடங்குகளையும் கடைப்பிடிப்பதாகும். நாங்கள் யார் என்பதை தீர்மானிக்கையில் தீர்வுக்கட்டமான பகுதியான நேர்மையும் உன்னதமான தன்மையும் அதன்மூலமாக எமக்கு கிடைக்கின்றது.

நாங்கள் கூட்டாக சீவிக்கவேண்டுமென்பதை இன்று நாங்கள் விளங்கிக்கொண்டுள்ளோம். நாங்கள் ஒன்றாக வாழவேண்டுமாயின் ஏனைய ஆட்களின் கருத்துக்களை எம்மால் பொறுத்துக்கொள்ள இயலுமானதாக அமைதல் வேண்டும். மத அபிப்பிராயங்களைப் பொறுத்துக்கொள்ளல், கருத்தியல்களைப் பொறுத்துக்கொள்ளல், தற்பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களில் இது அவசியமாகின்றது. தவறினை மன்னிப்பதுதான் அன்பினை தீவிரமாக வெளிப்படுத்துகின்ற விதமாகும். இந்த நாட்டினை மீளக்கட்டியெழுப்ப அடிப்படையாக அமையவேண்டிய தத்துவம் நிச்சயமாக இனப்படுகொலையோ, பிரித்துவைத்தலோ அல்லது சமமான நிலைமையை அடைதல் பற்றி நம்பிக்கை வைக்கின்ற தத்துவமோ அல்லவென்றும் இனத்துவ ஒற்றுமையை அடைதல் மீது நம்பிக்கை வைக்கின்ற தத்துவமாக அமைதல் வேண்டுமென நான் நினைக்கிறேன். அவ்விதமான இனத்துவ ஒற்றுமையை அடையவேண்டுமாயின் எமது வாழ்க்கையை நோக்குகின்ற விதம் முழுமையாகவே மாறவேண்டும்.

நாங்கள் ஒவ்வோர் ஆளுக்கும் மதிப்பளிக்கவேண்டும். எவரேனும் ஒருவர் எம்மளவுக்கு உயர்ந்தவராக இல்லாதிருக்கக்கூடும். எமக்கு உள்ளதாக நாங்கள் கூறுகின்ற புலமைசார்ந்த வெற்றிகள் அல்லது கல்வித் திறமைகள் அல்லது அனுபவங்கள் அவரிடம் இல்லாதிருக்கக்கூடும். எனினும் மனதர்களிடம் உள்ளதென சந்தேகிக்கப்படாத ஆற்றல்கள் மற்றும் தோற்றுவாய்கள் அனைத்துமே கண்டறியப்பட்டுள்ளதாக அதன் மூலமாக கருதப்படுவது கிடையாது. நீங்கள் சனநாயகத்தை உண்மையான அர்த்தத்தில் எடுத்துக்கொண்டால் அதன் மூலமாக கருதப்படுவது வித்தியாசங்களை பொறுத்தருளுவதாகும்.. உலகத்தின் பன்வகைமை அழிக்கப்படவேண்டியதொன்றல்ல ஊக்குவிக்கப்படவேண்டிய ஒன்றாகுமென்பதை ஏற்றுக்கொள்வதாகும். உங்களுக்கிடையில் கருத்துபேதங்கள் இருப்பின் அமைதியான வழிமுறைகளைப் பிரயோகித்தே அவற்றைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் நாங்கள் அறிந்துகொள்ள இடமுள்ளபோதிலும் தற்போது நாங்கள் அறியாதவை அளப்பரியவை. ஒவ்வோர் ஆளுக்கும் இயலுமான உச்சமட்டத்தில் முன்னேறுவதற்காக ஒத்துழைப்பு நல்குகின்ற சூழ்நிலை மற்றும் நிலவரங்களை பெற்றுக்கொடுத்தலை இலங்கை ஆரம்பிக்குமென நான் நேர்மையாக நம்புகிறேன். நான் மேற்கோள் காட்டவேண்டிய அரிஸ்டோட்டலின் ஒரு அவதானிப்பு இருக்கின்றது. “அனைத்துக் குறைபாடுகளையும் நிவர்த்திசெய்து கொண்டால் விலங்குகள் மத்தியில் சிறந்த விலங்காக அமைபவன் மனிதனே. எனினும் சட்டம் மற்றும் நியாயம் என்பவற்றிலிருந்து தூரவிலக்கி வைத்தால் அனைத்து விலங்குகள் மத்தியிலும் கெட்ட விலங்காக அமைவதும் மனிதனே. ஏனெனில் ஆயுதம்சார் அநீதி மிகவும் பயங்கரமான அநீதியானதாக அமைவதோடு பிறவியிலேயே அவன் இரு கரங்களாலும் ஆயததாரியாக உள்ளான். அறிவாலும் நற்பண்பாலும் பாவிக்க அவை கிடைத்துள்ளபோதிலும் மிகவும் கெட்ட நோக்கத்துடன் அவன் அவற்றைப் பாவிக்க இடமுண்டு. எனவே அவனிடம் நற்பண்பு எதுவும் இல்லாவிடின் அனைத்து விலங்குகள் மத்தியிலும் மிகவும் அசுத்தமான மற்றும் மிலேச்சத்தனமானவனாக அமைபவனும் அவனே.”

இறுதியாக பனிக்கார் - தனபாலசிங்கம் சவால் கேடயத்தை வென்றெடுத்த மாணவர்களுக்கு மீண்டும் நல்வாழ்த்துக்கூற இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதோடு அவர்களின் கிரிக்கெற் போராட்டத்திற்காக கிறிக்கெற் அணிகள் இரண்டுக்கும் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**நன்றி.**